செய்தி வெளியீடு எண் : 822 நாள் : 03.05.2023

**செய்திவெளியீடு**

# தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தின் (டாஸ்மாக்) மால் ஷாப்பில் மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் திரு. வி. செந்தில் பாலாஜி அவர்கள் ஆய்வு

**இன்று (03.05.2023) சென்னை, அண்ணாநகர், V.R. மாலில், செயல்பட்டு வரும் தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தின் (டாஸ்மாக்) மால் ஷாப்பில் மாண்புமிகு. மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் திரு. வி. செந்தில் பாலாஜி அவர்கள் ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின்போது தமிழ்நாடு மாநில வாணிபக் கழக (டாஸ்மாக்) மேலாண்மை இயக்குநர் திரு.எல். சுப்பிரமணியன், இ.ஆ.ப., அண்ணாநகர் சட்டமன்ற உறுப்பினர் திரு.M.K.மோகன், பெருநகர சென்னை மாநகராட்சி நிலைக் குழுத் தலைவர் திரு.நே.சிற்றரசு மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.**

**பின்னர், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் திரு. வி செந்தில் பாலாஜி அவர்கள் செய்தியாளர்களிடம் பேசுகையில்,**

கடந்த 07.05.2021 அன்று தமிழ்நாட்டின் முதலமைச்சராக மாண்புமிகு தளபதி அவர்கள் ஆட்சி பொறுப்பேற்றார்கள். ஆட்சி பொறுப்பேற்ற இரண்டு ஆண்டு காலத்தில் இதுவரை 96 டாஸ்மாக் மதுபான கடைகள் மூடப்பட்டுள்ளன. தமிழ்நாடு சட்டமன்றத்தில் நடந்து முடிந்த கூட்டத்தொடரில் 500 டாஸ்மாக் சில்லறை மதுபானக் கடைகள் மூடப்படும் என்ற அறிவிப்பும் வெளியிடப்பட்டிருக்கின்றன. இங்கே வந்திருக்கக்கூடிய தொலைக்காட்சி, பத்திரிக்கையை சார்ந்திருக்கக்கூடிய நண்பர்களுக்கு தெரிவித்துகொள்வது, டாஸ்மாக் நிறுவனத்தின் வருமானத்தைக் கொண்டுதான் தமிழ்நாடு அரசு நடப்பதை போல ஒரு தோற்றத்தை வெளியிட்டு சில நேரங்களில் நீங்கள் செய்தியாக வெளியிடுவது மிகவும்

வேதனைக்குரியது. செய்திகளை வெளியிடக்கூடிய தொலைக்காட்சி நிறுவனங்களாக இருந்தாலும் சரி, பத்திரிக்கைகளாக இருந்தாலும் சரி உண்மையில் என்ன நடந்திருக்கிறது, ஏற்கனவே, என்ன நடந்து முடிந்திருக்கிறது கடந்த ஆட்சியில் என்ன நடந்து முடிந்திருக்கிறது, வெவ்வேறு மாநிலங்களில் நடைமுறையில் என்ன இருக்கிறது என்ற உண்மை தன்மை அறியாமல், என்ன சூழலில் இருக்கிறது என்று தெரியாமல் செய்திகளை, தொழில் ரீதியான போட்டியின் அடிப்படையில் ஒருவருக்கொருவர் செய்தியை முந்தி வெளியிட வேண்டும் என்ற ஆர்வத்தில் உண்மை தன்மை அறியாமல் செய்திகளை வெளியிடுவது தான் வருத்தத்திற்குரிய செய்தியாக இருக்கிறது.

குறிப்பாக, சமீபத்தில் மால் ஷாப் முன்பு இதை எலைட் ஷாப் என்று சொல்லிக் கொண்டிருந்தோம். மால் ஷாப்களில் டாஸ்மாக் நிறுவனத்தின் மூலம் ஆட்டோமேட்டிக் வென்டிங் இயந்திரம் பயன்பாடு குறித்து சமூகவலைதளங்களிலும் தொலைக்காட்சி மற்றும் பத்திரிக்கைகளிலும் தவறான செய்தி வெளிவந்தது. செய்திகளை வெளியிடுவதற்கு முன் உண்மை தன்மையை அறிந்து வெளியிட்டால் ஏற்புடையதாக இருக்கும். ஒரு சில தொலைகாட்சிகள் தவறான செய்தியை வெளியிட்டதால் அனைத்து டிவி நிறுவனங்களும் வெளியிடக்கூடிய ஒரு சூழ்நிலைக்கு தள்ளப்படுகிறார்கள். நீங்கள் வெளியிடக்கூடிய செய்திகளை உண்மைதன்மை அறியாமல் சில அரசியல் எதிர்க்கட்சிகள் அரசியல் செய்ய வேண்டும் என்பதற்காக அரசின் மீதுள்ள காழ்ப்புணர்ச்சியின் காரணமாக, அரசின் மீது குற்றச்சாட்டுகளை சொல்ல வேண்டும் என்பதற்காக தேடித்தேடி பார்த்து எந்த குற்றச்சாட்டும் அரசின் மீது சொல்லமுடியாத சூழலில் உங்களைப் போன்ற செய்தி நிறுவனங்கள் வெளியிடக்கூடிய செய்திகளின் அடிப்படையில் அதை ஆதாரமாக, அடையாளமாக வைத்துக் கொண்டு சில அறிக்கைகளை வெளியிடுகிறார்கள். உள்ளபடியே இந்த மால் ஷாப்பினை நீங்கள் வந்து பார்த்தீர்கள், யாராவது 21 வயது குறைந்த பள்ளி, கல்லூரி படிக்கக்கூடிய

மாணவர்களோ அல்லது குழந்தைகளோ அதை சென்று எடுக்க முடியுமா? இந்த மால் ஷாப்பில் ஏ.டி.எம் இயந்திரம் மாதிரி எடுக்க முடியுமா? நீங்களே சொல்லுங்கள். இந்த கடை திறந்து இருக்கக்கூடிய நேரம் மதியம் 12.00 மணியிலிருந்து இரவு 10.00 வரை, கடை திறந்திருக்கும் பொழுது மேற்பார்வையாளர் அல்லது விற்பனையாளர் முன்னிலையில்தான் அதை பயன்படுத்த முடியும்.

இந்த மால் ஷாப் திறந்தது 2019ல், யார் திறந்தது, 2019ல் யார் ஆட்சி, மொத்தம் 4 கடைகளில் ஆட்டோமேட்டிக் வெண்டிங் இயந்திரம் நிறுவப்பட்டுள்ளது. கடந்த அதிமுக ஆட்சியில் 2013, 2014, 2018 மற்றும் 2019ல் திறக்கப்பட்ட மால் ஷாப்களில் தான் ஆட்டோமேட்டிக் வெண்டிங் இயந்திரம் வைக்கப்பட்டுள்ளது. அதுவே, தெரியாமல் நாங்கள் புதிதாக இயந்திரம் கொண்டு வந்து பொதுமக்கள் கூடுகின்ற இடங்களில் ஏடிஎம் மெஷின் மாதிரி பொறுத்தப் போகிறோம் என்ற பொய் செய்தியை மக்களிடத்திலே பரப்பியுள்ளார்கள்.

அதிக விலைக்கு விற்பதைத் தடுப்பதற்காகவும், டாஸ்மாக்கில் சீர்திருத்த நடவடிக்கையாகத்தான் இது போன்ற நடவடிக்கைகள் எடுக்கப்படுகிறது. எதிர்கட்சி தலைவர் ஏதோ கடையே திறக்காத மாதிரியும், இந்த டாஸ்மாக் நிறுவனத்தையே நிறுத்தி வைத்துவிட்டு அரசு நிர்வாகம் நடத்தியதைப் போல பேசுகிறார். நான் ஒன்று கேட்கிறேன் எதிர்கட்சி தலைவராக இருந்தாலும் சரி, பாட்டாளி மக்கள் கட்சியின் தலைவர் திரு.அன்புமணி ராமதாஸ் ஆக இருந்தாலும் சரி என்னைக்காவது நாடாளுமன்றத்தில் இந்தியா முழுவதும் பூரண மதுவிலக்கு வேண்டும் என்று ஒரு கவன ஈர்ப்பு தீர்மானமோ அல்லது ஒரு தனி நபர் தீர்மானமோ கொடுத்திருப்பார்களா, நாடாளு மன்றத்தில் பேசுவதற்கு தைரியம் இல்லை, துணிச்சல் இல்லை.

மக்களிடத்தில் அரசின் மீது அவதூறு பரப்ப வேண்டும் என்பதற்காக அவர்கள் உங்கள் மூலமாக செய்திகளை எடுத்துக் கொள்கிறார்கள். கடந்த ஆட்சியில் மதுபான விற்பனை மூலம் வந்த வருவாயை

பயன்படுத்தவில்லையா. அவ்வித வருவாயை தனியாக பயன்படுத்தாமல் ஒதுக்கி வைத்து விட்டார்களா. கடந்த ஆட்சியில் கோயில்கள், பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்கள் மற்றும் பள்ளிகள் அருகாமையில் திறக்கப்பட்ட சுமார் 96 டாஸ்மாக் மதுபானக் கடைகள் பொதுமக்களின் கோரிக்கை மற்றும் மனுவின் அடிப்படையில் கடந்த இரண்டாண்டுகளில் எவ்வித அறிவிப்பும் இன்றி மூடப்பட்டிருக்கிறது. கடந்த சட்டமன்றக் கூட்டத்தொடரில் 500 கடைகள் மூடப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

அதற்கான கணக்கெடுப்பு பணிகள் தற்பொழுது துவங்கப்பட்டுள்ளது. இந்த இடத்தில் பொருத்தப்பட்டுள்ள இயந்திரம் கூட கம்பெனிகாரர்களால் நிறுவப்பட்டுள்ளது. டாஸ்மாக் நிறுவனத்தால் ஒரு ரூபாய் கூட இந்த தானியியங்கி இயந்திரத்திற்காக செலவிடப்படவில்லை. நீங்களே இப்பொழுது பார்க்கின்றீர்கள். இந்த தானியங்கி எந்திரங்கள் வணிக வளாகத்திற்குள் கடைக்கு உள்ளே பொறுத்தப்பட்டுள்ளது, இவற்றில் எப்படி சிறுவர்கள் மற்றும் பள்ளி மாணவர்கள்  உள்ளே நுழைந்து மதுபானம் பெறமுடியும். கடை திறந்திருக்கும் நேரமான மதியம் 12 மணி முதல் இரவு 10 மணி வரை மட்டுமே இங்கு இயந்திரம் மூலமாக மதுபானம் பெறமுடியும், அந்த நேரத்தில் கடையில் மேற்பார்வையாளர் மற்றும் விற்பனையாளர் இருப்பார்கள். எனவே, செய்திகளை வெளியிடும் முன்பு சமூக வலைதளங்களில் பரப்புகின்றவற்றை எல்லாம் செய்திகளாக வெளியிட்டு விடுகின்றீர்கள்.

இனிவரக்கூடிய காலங்களில் அரசின் மீது அவதூறு மற்றும் குற்றச்சாட்டு செய்திகளை வெளியிடும் முன்பாக செய்திகளின் உண்மைத்தன்மை அறிந்து அதன்பின் செய்திகளை வெளியிடுவதுதான் சிறந்தது. பணம் கொடுத்தால் மதுபானம் வழங்கப்படும்பட்சத்தில் தானியங்கி இயந்திரம் அமைக்கப்படுவதால் கூடுதல்விலை கொடுத்து வாங்குவதாக வரும் புகார்களை தவிர்க்க முடியும். அவ்வாறு கூடுதல் விலைக்கு விற்றதாக வந்த புகார்களின் அடிப்படையில் 1,977 பணியாளர்கள் மீது

துறைரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டதோடு அல்லாமல் சுமார் 5.50 கோடி ரூபாய் அபராதமும் வசூலிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு மாண்புமிகு. மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் திரு.வி.செந்தில் பாலாஜி அவர்கள் செய்தியாளர்களிடம் பேசினார்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in